திட்டங்களுக்கு ரூ 1,33 லட்சமும், விவசாயிகளுக்கு ரூ 2,87 லட்சமும், தொழில் துறைகளுக்கு மாநில உதவியாக ரூ 51 லட்சமும், கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு ரூ 31 லட்சமும், வீடுகட்டும் திட்டத்திற்கு ரூ 1,00 லட்சமும், சமுதாய வளர்ச்சிக்கு ரூ 84 லட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளன.

ஆதாரங்கள்.

40. 1961-62-ல் ரூ 3,82 லட்சம் பொதுக் கடனைத் திருப்பித்தர வேண்டும். இதில் இந்த மாநில அரசாங்கத்தின் பொறுப்பு ரூ 1,97 லட்சமாகும். எஞ்சிய பகுதி ஆந்திரப் பிரதேசம், கேரளம், மைசூர் ஆகிய மாநிலங்களின் பொறுப்பு ஆகும். முதலீட்டுச் செலவை உத்தேசித்து அடுத்த ஆண்டில் ரூ 10 கோடி பொதுக் கடன் எழுப்ப முடிவு செய்துள்ளோம். 1961-62 இறுதியில் 78 லட்சம் ரூபாய் ரொக்கக் கையிருப்பு இருக்குமென எதிர்பார்க்கப் படுகிறது. ஆகவே வழிவகையில் துண்டு விழாத முறையில் வரவு-செலவுத் திட்டம் அமைக்கப்பட்டுள்ளது.

சலுகைகள்.

41. புதிய விற்பனை வரிச் சட்டத்தில் ஆண்டுதோறும் ரூ 10,000 முதல் ரூ 25,000 வரை விற்பனை செய்பவர்களுக்கு, விரிவான கணக்கு வைக்காமல் உத்தேச மதிப்பின் பேரில் மொத்தமாக வரி செலுத்தக்கூடிய சலுகை ஒன்றைக் கொடுத்திருந்தோம். நடைமுறையில் ஏற்படுகின்ற அனுபவத்தைக்கொண்டு, இந்தச் சலுகையை விரிவு படுத்துவதைப்பற்றி ஆராய்வோம் என்று அத்துறை அமைச்சர் உறுதியளித்திருந்தார். அதற்கிணங்க, ஏற்பட்ட பரிசீலனையின் பேரில், ஆண்டு விற்பனை ரூ 50,000 வரை உள்ளவர்கட்கும் இச்சலுகையை வழங்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது. யார் யார் இந்தச் சலுகைக்குரியவர்கள் என்பது நடப்பு ஆண்டுக் கணக்கு அடிப்படையில் முடிவு செய்யப்படும்.

இலவசக் கல்வி.

42. ஐந்தாவது வகுப்பு வரை இலவசமாக அனைவருக்கும் கல்வியளிக்கும் திட்டம் அமுலிலிருந்து வருகிறது. எட்டாவது வகுப்புவரை ஏழை மாணவர்கட்குச் சம்பள விலக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. அதற்கு மேல் வகுப்புகளில் பயிலக் கூடிய பள்ளி மாணவர்களில், ஹரிஜன வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கும், சமுதாயத்தில் பின்தங்கிய மற்றப் பகுதியினருக்கும், சம்பளச் சலுகைகள் கொடுக்கப்பட்டு வந்துள்ளன. இந்தச் சலுகைகள் சாதி அடிப்படையில் இல்லாமல் பொருளாதார அடிப்படையில் அமையவேண்டு மென்ற கருத்துச் சில காலமாகவே வலியுறுத்தப்பட்டு வந்திருக்கிறது. அந்த அடிப்படையில் 11-வது வகுப்புவரை எல்லா ஏழை மாணவர்கட்கும், சாதி, சமய வேறுபாடின்றி, இலவசக் கல்வி கொடுப்பதென அரசாங்கம் முடிவுசெய்துள்

ளது. (ஆரவாரம்) இச்சலுகையின் காரணமாக ஆண்டொன்றுக்கு 58 லட்சம் ரூபாய் அதிகச் செலவு ஏற்படும் எனக் கணக்கிடப்பட்டு, அதற்கான நிதியும் ஒதுக்கப்பட்டுள்ளது. தகுதி பெற்ற மாணவர்கள் யாராக இருந்தாலும் வறுமையின் காரணமாகக் கல்வி பெற முடியவில்லை என்ற நிலையை நீக்குவதில், நாம் எடுத்திருக்கும் முடிவு, முதற்படியாகும்.

ஐந்தாண்டு திட்டங்கள்.

43. இந்த பட்ஜெட்டில் திட்டத்திற்காக ஒதுக்கப் பட்டுள்ள நிதி பற்றிச் சிறிது கூற விரும்புகிறேன். தமிழ் நாட்டின் இரண்டாம் திட்ட அளவு 152 கோடி ரூபாயாக முதலில் நிர்ணயிக்கப்பட்டிருந்தது. முதல் நான்கு ஆண்டுகளில் மட்டும் திட்டச் செலவு 1,42·76 கோடி ரூபாயாக இருந்தது. நடைமுறையாண்டின் திருத்த மதிப்பீட்டின்படி செலவு 43·43 கோடி ரூபாயாகவும் மொத்தச் செலவு 1,86·19 கோடி ரூபாயாகவும் இருக்கும்.

| | (ரூபாய் கோடிக் கணக்கில்.) |
|---|---|
| 1956-57 .. .. .. .. | 28·67 |
| 1957-58 .. .. .. .. | 30·25 |
| 1958-59 .. .. .. .. | 34·61 |
| 1959-60—(கணக்குகள்) .. .. | 39·89 |
| (குந்தா உதவி) .. .. | 9·34 |
| மொத்தம் .. | 1,42·76 |
| 1960-61 (திருத்த மதிப்பீடு) .. | 43·43 |
| பெரு மொத்தம் .. | 1,86·19 |

முதலில் ஏற்றுக்கொண்ட இலக்கைவிட 34 கோடி ரூபாய் அதிகச் செலவு செய்து இரண்டாவது திட்டத்தை மிக வெற்றிகரமாக நிறைவேற்றியுள்ளோம். தேவையான நிதி ஆதாரங்களைச் சேகரிப்பதற்குத் தீவிர முயற்சி எடுத்துக் கொண்டமையாலும் முன்னேக்குடன் நிர்வாக யந்திரத்தை இதற்கு ஏற்பச் சீரமைப்புச் செய்தமையாலும் இந்த அளவு வெற்றியைப் பெற முடிந்தது. இரண்டாந் திட்டத்தில் இந்த மாநிலத்தில் திரட்ட வேண்டி இருந்த ரூ 13 கோடிக்குப் பதிலாக 20 கோடி ரூபாய் திரட்டினோம். எதிர்பார்த்ததற்கு மேலாகவே பொதுக் கடனையும் எழுப்பியுள்ளோம். இந்த அனுபவங்களைக் கொண்டு மூன்றாவது திட்டத்தை இன்னும் நல்ல முறையில் நிறைவேற்ற முடியும் என்று நம்ப இடமிருக்கிறது.

இந்த மாநிலத்தின் மூன்றாந் திட்ட அளவு 2,91 கோடி ரூபாய் என்று முடிவு செய்யப்பெற்றுள்ளது. மொத்தத் தொகையில் 16 சத வீதம், அதாவது ரூ 46 கோடி ரூபாய்